

நாகை மாவட்டம் நாகை மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கும் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட கழகப் பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில்

# ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்!

## கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் அறிக்கை!

சென்னை, ஜூன் 8-

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் மாற்றுத் திறனாளிகளுக்கான NIEPMD நிறுவனத்தில் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 2005-ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்களின் பெரும் முயற்சியில் கொண்டுவரப்பட்ட நிறுவனம், ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் தேசிய மேம்பாட்டு நிறுவனம் (NIEPMD) ஆகும். மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

தேசிய நிறுவனமான NIEPMD கிழக்குக் கடற்கரைச் சாலை, முட்டுக்காடு, கோவளத்தில் அமைந்துள்ளது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாற்றுத்திற னாளிகளுக்கு இந்த நிறுவனம் பல ஆண்டுகளாக மதிப்புமிக்க சேவைகளை வழங்கி வருகிறது.

ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஊனங்கள் அமையப்பெற்று சிரமப்படுபவர்களு க்கும், பல்வகை ஊனம் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் மதிநுட்பமிக்க மற்றும் நுண்ணிய அறிவியல் முறை சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் நிறுவனமாக NIEPMD இருப்பது குறிப்பிடத் தகுந்ததாகும். 2024-25 ஆண்டு செயல் அறிக்கையின் படி புதிய பயனாளர்கள்: 4565 நபர்களும்; தொடர் பயனாளர்கள்: 52342 நபர்களும் பயன் பெற்று வந்துள்ளனர். பின்வரும் துறைகள் மற்றும் பிரிவுகள் இதில் செயல்பட்டு வருகிறது.

1.மருத்துவ அறிவியல் துறை

a)செயற்கை அவயங்கள் மற்றும் உபகரணங்கள் துறை.

b)இயன் முறை சிகிச்சை.

c)தொழில்சார் சிகிச்சை.

2.மருத்துவ உளவியல் துறை.

3.பேச்சு, செவிப்புலன் மற்றும் தகவல் தொடர்புத் துறை.

4.சிறப்புக் கல்வித் துறை.

5. முதியோர் தற்சார்பு வாழ்க்கைத்துறை என பல்வேறு பிரிவுகளுடன் தமிழகத்தின் தேசிய நிறுவனமாக பரிணமித்து சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பள்ளிகளும், அவர்களை முறையாக பராமரிப்பதற்கான சிகிச்சைகளும், கூடுதலாக அவர்களை முறைப்படி வழி நடத்த தேவையான சிறப்பு நிபுணர்களையும் உருவாக்குகின்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்ட கல்லூரியும் இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தில் 24 நிரந்த பணியாளர்களும் மற்றும் 150-க்கும் மேற்பட்ட ஒப்பந்த பணியாளர்களும் தொடக்கத்தில் இருந்து இந் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக தங்களை அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக தினசரி செயல்பாடு, பராமரிப்பு, மறுவாழ்வு சேவைகள், சிறப்புக் கல்வி, நிர்வாகம், விடுதி பராமரிப்பு, சிகிச்சை சேவைகள் மற்றும் வெளிநடவடிக்கை என பல திட்டங்களுக்கு கணிசமாக பங்களிக்கின்றனர்.

பெரும்பாலும் தங்களுடைய வாழ்நாளின் நேரத்தை இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து வந்த ஒப்பந்த ஊழியர்களுக்கு, சொற்ப ஊதியம் கொடுக்கப்பட்டு வந்த நிலையில், பல்வேறு பேச்சு வார்த்தைக்கு பின், செப்டம்பர் 2024 ஆண்டு அமைச்சகத்தின் ஒப்புதலோடு, திருத்தி அமைக்கப்பட்ட ஊதியத்தை வழங்குவதாக அதிகாரப்பூர்வமாக தெரிவித்தது. அதன் அடிப்படையில் எழுத்து தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தியதில் தேர்ச்சி பெற்றதோடு, அனுபவ தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து ஒப்பந்த ஊழியராக அனுமதிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஒப்பந்த ஊழியர்களாக பணியாற்றி வருபவர்கள் 2024-2027 ஆண்டுக்கான ஒப்பந்தம் முடிவதற்கு முன்னரே இந்த நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, ஊழியர்களை வேலையை விட்டு நிறுத்துவதாக தெரிவித்திருக்கிறது.

குறிப்பாக ஏப்ரல் 2026 ஆண்டு புதிதாக கூடுதல் பொறுப்பாக பதவியேற்றுள்ள இயக்குனர் (NIEPMD) டாக்டர் பி. வி.ராம்குமார் அவர்களின் நியமனத்திற்குப் பிறகு, NIEPMD- இல் கிராண்ட்- இன்-எய்ட் (GIA) நிதிநிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் தேவையான அளவு நிதி இல்லை என மேற்கோள் காட்டி உடனடியாக பெரிய அளவிலான 100-க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களை நீக்குவதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. மேலும் தமிழர்களாகிய இந்த நிறுவன ஊழியர்கள் மீது கடுமையான இந்தி திணிப்பு நடப்பதாகவும் புகார் எழுந்துள்ளது.


இது ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தி னரிடையே அச்சத்தையும், நிலையற்ற தன்மையையும், மன அழுத்தத்தையும் உருவாக்கியுள்ளது. வயது மூப்பின் காரணமாக புதிதாக பணி கிடைப்பது என்பது எளிதானதல்ல என்பதால், அவர்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும் கேள்விக்குறியாகி உள்ளது.

இதனால் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்ற பெரும்பான்மை ஏழை எளிய மற்றும் நடுத்தர குடும்ப பெற்றோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். சொல்லப்போனால் மேல் குறிப்பிட்ட செயல்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு ஒரு சாதாரண சிகிச்சை மையமாகவே இதை செயல்படுத்துவதற்கு தான் இந்த அதிகாரிகளும் ஒன்றிய அரசும் திட்டமிடுகிறதோ என்ற எண்ணம் எழுகிறது.

எனவே சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் தலையிட்டு ஊழியர்களின் வேலை வாய்ப்பை நிரந்தர தன்மையுடையதாக மாற்றி வாழ்வாதாரத்தையும்; இந்நிறுவனம் எவ்வித இடையூறுமின்றி திறம்பட செயல்படவும்; மாற்றுத்திறனாளி குழந்தைகளை பாதுகாத்திடவும், மாற்றுத்திறனாளிகளின் அணி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வரலாற்று நெடுந்தொடர் கலைஞர்!



பண்பாட்டுப் பகலவனே!
பார் போற்றும் தமிழ் மகனே!
திராவிடத்துத் திரவியமே!
திக்கெட்டும் ஒளியாகி
தமிழர் திசையாகி நின்றவனே!

உழைப்பாலே பூமியுனை
சுற்றி வர வைத்தவனே!உன்
கரகரத்த குரலாலே
காந்தத் தமிழ் செய்தவனே!
உன் ஈர்ப்பு விசை தானே
எம் இனத்தின் வரலாறு!

நீ பிறந்த போது
உன் கையில் தமிழ்க்கொடி
இருந்திருந்தால்
தொப்புள் கொடியில் கூட
கொடியேற்றி மகிழ்ந்திருப்பாய்..!

எம் தலைவா!
நீ தமிழர் திசையெங்கும்
லட்சம் கொடியேற்றி
லட்சிய கொடியேற்றி
கொடிகம்பங்களை எல்லைகளாக்கி
தமிழ் மொழியினம் பாதுகாத்தாய்!
தமிழரை வாழ வைத்தாய்!

முடிவேயில்லாத
வரலாற்று நெடுந்தொடர் நீ !!

உனக்கே ..... உனக்கே ....
இடமில்லை என்றார்கள்
மூன்றாவது அணுகுண்டு வீசப்படாமல்
உலகம் அதிர்ந்தது!

உன்னை தனக்குள்
புதைத்து கொள்ள அல்ல
விதைத்துக்கொள்ள
அன்றைய நாளில்
உலகத்தமிழர்களின்
அத்தனை இதயமும்
மெரினா கடற்கரையாய்
மாறிய அதிசயம் நிகழ்ந்தது!

நீ பூக்களை வென்றவன்!
குவளை மலர்கள்
சுருக்கலில் கண் மலரும் முன்னரே
விழித்தெழுந்து பூக்களை வென்றவன்!

காதுகளால் படித்தவன்!

பெரியார், அண்ணா
பேச்சை கேட்டே
பேரறிவு பெற்றவன். முத்தமிழ் அறிஞனானாய்!

கண்களால் பேசியவன்
சூரியப் பார்வையால்
தமிழராட்சியை பிரகடனம் செய்தவன் நீ!



**கு.வாஞ்சிநாதன்**
**தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர்**
**கடலூர்**



திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருவரங்கம் தேவி தியேட்டர் எதிரில், நாகப்பிள்ளை மண்டபம் வாசலில், அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வினை திருவரங்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பழனியாண்டி அன்னதானத்தை தொடங்கி வைத்தார். கழகத்தினர் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எப்போது மணக்கும் கிண்டி இருக்கும் திசையில்?

## ‘கணையாழி’ தலையங்கம்!




த்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழணங்கே”
மனோன்மணீயம் சுந்தரனாரின்
தமிழ்த் தெய்வப் பாடல் வரிகள்!
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
முதல் தடவை
முதலமைச்சராக இருந்தபோது,
மார்ச் 1970இல்
திரைப்படத்துறை பரிசளிப்பு விழாவில்
அறிவித்த
தமிழ்த்தாய் வாழ்த்தின் பாடல் வரிகள்!
தமிழ்த் தெய்வத்தைத்
தாயாக மாற்றித்
தமிழ்த் தெய்வ வணக்கத்தைத்
தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தார்!
தமிழில் பாடிய மேடை
‘தீட்டாயிடுத்து’ என்றும்
கச்சேரிகளில் ‘துக்கடா’ என்றும்
சிலர் கருதியிருந்த
தமிழைத்
தெய்வம் என்றார் சுந்தரனார்.
தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களும்
கொண்டாடும் வகையில்
தாய் என்றார் கலைஞர்!
தாய்மொழி எதுவாக இருப்பினும்
தமிழ்த்தாயை வாழ்த்துங்கள் என்று,
தாய்மொழி வாழ்த்து என்றில்லாமல்
தமிழ்த்தாய் வாழ்த்து என்றார்
முத்தமிழ் அறிஞர்!
அப்போதும்
“தமிழ் தெய்வமில்லை;
குட்டித் தேவதை” என்றார்கள்!
‘ஓம்’, ‘மந்திரம்’,
ஒலி, மொழி தெய்வம் என்றவர்களே,
கடவுள் வாழ்த்துக்குப் பதில்
மொழி வாழ்த்தா? என்றார்கள்!
அப்போது
பாவேந்தருக்கும் உடன்பாடில்லை.
தாயுமானவர் பாடலையோ,
திருக்குறள் கடவுள் வாழ்த்தையோ
தமிழ்த்தாய் வாழ்த்தாக்கலாம் என்று
புலவர்குழு கூடத்
தீர்மானம் போட்டிருக்கிறது.
தாயுமானவர் பாடலில்
மதச்சார்பு இருக்கிறது.
திருக்குறள் கடவுள் வாழ்த்தில்
‘தாள்’, ‘அடி’ இருக்கின்றன.
எந்த மதச்சார்பும் இல்லாமல்
பொதுவாக இருக்கிறது
மனோன்மணீயப் பாடல் என்பதோடு,

மற்றவர்கள் மனம் வாடக் கூடாதென்று
“ஆரியம்போல் உலக வழக்கு
அழிந்து ஒழியா”
என்ற வரியையும்
வாழ்த்தில் வசை வேண்டாம் என்று
நீக்கச் செய்தவர் கலைஞர்!
“பிறப்பொக்கும்” எனத் தொடங்கும்
கலைஞர் அவர்களின்
செம்மொழி மாநாட்டுப் பாடல்,
செம்மொழி வாழ்த்துப் பாடலாக
உலகத் தமிழர்களிடம்
ஒலித்துக் கொண்டிருக்கிறது!
அப்போதும்
“நீச மொழி வாழ்த்திற்கு
மரியாதையா?” என,
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
எழுந்து நிற்க
மனம் இல்லாதவர்களையும்
ஆணையிட்டு எழுந்து நிற்க வைத்தார்
மாண்புமிகு முன்னாள் முதல்வர்
மு.க. ஸ்டாலின் அவர்கள்!
திராவிட மொழிகளின் தாய் என்று
போற்றப்படும் தமிழ்
இப்போது
ஈழத் தமிழர்களால்
உலக மொழிகளின் தோழியாக
ஆகியிருக்கிறது!
ஆனால் தமிழ்நாட்டில்
முதலிடத்தில் இருந்த,
இருக்க வேண்டிய
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
மூன்றாம் இடம்!
வந்தே மாதரம் பாடலுக்கு
முதலிடம்!
முதல் இரண்டு சரணங்கள்
சமஸ்கிருதச் சொற்கள்!
பின்வரும் பகுதி
வங்காள மொழியில்!
கேட்டால் சொல்கிறார்கள்,
“வந்தே மாதரம் தேசியப் பாடல்” என்று!
வந்தே மாதரம்
விடுதலைப் போராட்டக் காலத்து
தேசிய ஒற்றுமையின் அடையாளம் என்று
சொல்லியிருக்கிறார் பாரதியார்!
தாயை வணங்கும்
வந்தே மாதரம் சரியில்லை
வந்தே பிதரம் –
தந்தைய வணங்குகிறேன்.
தந்தை என்பது ஆங்கில அரசு என்று
கொச்சி சமஸ்தானத்தில்
திவான் பேஷ்கார் வேலை பார்த்த
எ. சங்கரய்யா என்பவர் அப்போதே
இந்தியா பத்திரிகைக்கு (8/6/1907)
கடிதம் எழுதியிருக்கிறார்.
1907இல் வந்தே மாதரம்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
மொழிபெயர்த்தவர் பாரதியார்!
பாரதியார் இருமுறை
மொழிபெயர்த்திருக்கிறார்!
இந்தியா இதழில் (18.05.1907)
இராக, தாளக் குறிப்புகள் இல்லாமல்
வெளிவந்துள்ளது
முதல் மொழிபெயர்ப்பு!
‘முன்னொருமுறை முழுதும் அகவலாக
ஓர் மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன்;
ஆனால் அது
பாடுவதற்கு நயப்படாததாகையால்,
இப்போது பல சந்தங்கள் தழுவி
மொழிபெயர்க்கப்பட்டுள்ளது”
எனும் ஆசிரியர் குறிப்புடன்,
‘ஜாதீய கீதம்’ எனும் தலைப்பில்.
இந்தியா இதழில் (13.03.1909)
வெளிவந்துள்ளது
இரண்டாவது மொழிபெயர்ப்பு!
“ஆலயம் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம்
தேவி இங்குனதே”
என்றும்,
“பத்துப் படைகொள்ளும் பார்வதி தேவியும்,
கமல இதழ்களில்
களித்திடும் கமலையும்,
அறிவினை அருளும்
வாணியும் அன்னை நீ” என்றும்,
பாரதியின் மொழிபெயர்ப்பில்
இடம்பெற்றிருக்கின்றன!
(சீனி விவிசுவநாதன்,
காலவரிசையில் பாரதி படைப்புகள்)

ஒரு மதச்சார்பில்லா
அரசு நிகழ்ச்சிகளில்,
எந்த மதச்சார்பும் இல்லாத
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
இப்போது மூன்றாவது இடம்!
அனைத்து உலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும்
தமிழணங்கின் புகழ்
எப்போது மணக்கும்
கிண்டி இருக்கும் திசையில்?



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
ஜூன் 2026